# காலம் மாற்றிய நாடக மேடை

கோமல் சுவாமிநாதன்

காலங்கள் மாறும்போது சமூக வரலாறுகள் மாறுகின்றன. மக்களின் பழக்க வழக்கங்கள் மாறுகின்றன. எண்ணங்களும் கோட்பாடுகளும் மாறுகின்றன. அதை ஒட்டி குறிப்பிட்ட தேசத்தில் உள்ள கலைகளும் கலாச்சார நடைமுறைகளும் மாறுகின்றன. நமது நாட்டில் கலைகளின் வரலாறும் காலத்தை ஒட்டி மாறி மாறி வந்திருக்கின்றன. கலைகளின் முக்கிய நோக்கம் 'தன்னை அறிந்துகொள்வதன் மூலம் தெய்வத்தை அறிவது' என்பதே பண்டைக் காலத்தில் முக்கிய கோட்பாடுகளாக இருந்து வந்திருக்கின்றன. இசை போன்ற கலைகள் மனிதனை தெய்வத்தின் அருகே நெருங்க வைக்கும் சாதனமாகப் பயன்பட்டன. அல்லது தன் ஐம்புலன்களுக்குப் புலப்படாத தெய்வத்தை வாழ்த்திப் பாடும் தோத்திரங்களாக இருந்திருக்கின்றன.

வேதகால பாடல்கள் இயற்கையின் சக்திகளான சூரியன், வருணன் போன்றவை இறை அம்சம் கொண்டதாக கருதப்பட்டு அவைகளை போற்றி துதிக்கின்ற வண்ணம் அமைந்தன. அதை ஒட்டியே நாடகக் காப்பியங்களும் தெய்வ நிலையை அடைய மனிதன் எவ்வாறு இருக்க வேண்டும் என்று புத்தி புகட்டுவதாக அமைந்தன. புராணக் கதைகள் வேதகால வாழ்க்கைக் கருத்துகளை மக்களுக்கு கதை மூலம் புரிய வைக்கும் சாதனமாக வெளிவந்தன. புராணக் கதைகளை ஒட்டிவந்த நாடகக் கதைகளும் இந்தக் கருத்தையே வலியுறுத்தின. பண்டைய சம்ஸ்கிருத நாடகங்கள், காளிதாசன், பவபூதி, பாசன் போன்ற மேதைகளின் நாடகங்களும் புராணத்தை அடி ஒற்றிவந்து அதை கலாபூர்வமாக மாற்றி மக்களிடம் செல்வாக்குப் பெற்றன.

இந்தப் புரா்ண காலம் பல நூற்றுண்டுகள் இந்தியக் கலைகளின் அம்சமாக இருந்தது. இதன் பல வெளியீடுகளாக கர்நாடக இசை, தெருக்கூத்து, நடனங்கள், கிராமியக் கலைகள் போன்ற பல கலை வடிவங்கள் வளர்ந்தன. இந்த பாதிப்பும் தமிழ் நாடக மேடையில் இருந்தது. தெருக்கூத்திற்கு எந்தக் காலத்தில் தோற்றம் ஏற்பட்டது என்று கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு அது பழமையான கலையாக இருந்து வந்திருக்கிறது. தெருக்கூத்து நாடகங்களின் கருவே பின்னர் வந்த நாடக மேடை நாடகங்களாக பரிணமித்தன. மன்னர் அரங்கங்களில் மன்னர் கண்டு களிக்க பல நாடகங்கள் எழுதி நடிக்கப்பெற்றன. சரபோஜி மன்னரின் முன்னால் நடிக்கப்பட்டதாகக் கூறப்படும் பல நாடகங்களை தஞ்சை சரஸ்வதி மகாலில் காணலாம்.

## கன்னையா, சங்கரதாஸ்

பத்தொன்பதாவது நூற்றுண்டின் இறுதிக் கட்டத்திலும் இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் தமிழ் நாடக மேடை பரவலாக வியாபித்து பல நூற்றுக்கணக்கான நாடகக் குழுக்கள் தோன்றின. அவைகள் இசையை மையமாகக் கொண்ட புராணக் கதைகளை வெகுவாக நடத்தி மக்களின் பாராட்டுதல்களைப் பெற்றன. தலைசிறந்த இசைமேதைகள் நாடக மேடையில் தோன்றி இசையாலும் நடிப்பாலும் நாடக மேடையைச் சிறக்கச் செய்தனர். இக் கட்டத்தில் தோன்றிய திரு. கன்னையா அவர்களின் பணியும் சங்கரதாஸ் சுவாமிகளின் பணியும் குறிப்பிடத்தக்கது. கன்னையா அவர்கள் கண்கவர் காட்சி ஜோடனைகளை நாடக மேடையில் அமைத்து பிரம்மாண்டமான தோற்றத்தை ஏற்படுத்தி பிரமிக்க வைத்தார். அவர் நாடகக் கலையை தெய்வ வழிபாடாக செய்தார் என்று தெரியவருகிறது. தத்துவக் கருத்துகள் அடங்கிய பகவத் கீதையை பாமரரும் புரிந்துகொள்ளும் வண்ணம் அவர் மேடையில் அமைத்துக் காட்டினுர். நாடகத்தின் நோக்கமே அவருக்கு தெய்வ வழிபாடு தான். தசாவதாரம் போன்ற கதைகளை பிரம்மாண்டமாகத் தயாரித்துள்ளார்.

இந்த பாணியில் சிறந்த காட்சி அமைப்பு இல்லாவிட்டாலும் சிறுவர்களை வைத்து கட்டுக்கோப்பாக நாடகத்தை அமைத்து சங்கரதாஸ் சுவாமிகள் புகழ் பெற்றுர். அவர் மாணவர்கள் பலர் இன்று இருக்கிருர்கள். முத்தமிழ் கலா

வித்வ ரத்ன ஔவை டி. கே. சண்முகம் அவர்கள் சுவாமிகளின் தலையாய மாணவர். சுவாமிகள் எடுத்துக் கொண்ட கதைகள் புராணக் கதைகள். இசைநயமும் சொல்நயமும் ஒருங்கிணைந்து தேன்சிந்தும் தமிழில் அவர் நாடகங்களை இயற்றினர். இன்றும் அந்த நாடகங்கள் மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்களில் தொழில் நாடகக் கலைஞர்களால் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த பாணியில் திரு. நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் செய்தது மகத்தான பணி. கன்னையா அவர்களின் காட்சியமைப்பும், சிறுவர்களைக் கொண்டும் நடிக்கச் செய்யும் பாணியையும் இணைத்து நெடுங்காலம் புகழ் பெற்று விளங்கினர்.

## சமூக நாடகங்கள்

சுதந்திரப் போராட்ட காலம் தீவிரமாக நடந்த காலத்தில் நாட்டு விடுதலையும் சமூகக் கொடுமைகளை ஒழிக்கும் எண்ணமும் இந்திய மக்களின் மனதில் வேரூன்றி இருந்த காலத்தில் நாடகம் புராண காலத்தில் இருந்து மாறி சமூக நாடகங்களாக பரிணமித்தன. நாட்டு விடுதலை, பெண்கள் முன்னேற்றம், ஹரிஜன நலம், வர்க்கப் போராட்டம் போன்றவை நாடகங்களின் முக்கிய கருத்தாக இருந்தன. காந்தியடிகளின் அரசியல் போராட்டம் கலைகளையும் தாக்கியது. காந்தியக் கொள்கைகள் நாடக மேடையில் ஆட்சி செலுத்தின. இதில் டி. கே. சண்முகம் அவர்களின் பணி தலையாயது.

சமூக நாடகங்களின் ஒரு புதிய திருப்பத்தை அறிஞர் அண்ணா அவர்கள் கொணர்ந்தார். அவர் தலைமையேற்ற திராவிட இயக்கத்தின் பின்னணியில் பல நாடகங்கள் தோன்றின. வசனம் வளம் பெற்றது. இசையின் முக்கியத்துவம் குறைந்து, பேசும் வசனங்களின் முக்கியத்துவம் அதிகரித்தது.

இந்தக் காலகட்டத்தில் திரு. எஸ். வி. சகஸ்ரநாமம் தலைமை ஏற்ற ''ஸேவா ஸ்டேஜ்'' குழு அன்றுட சமூகப் பிரச்சினைகளை யதார்த்தமான முறையில் அலசிப் பார்க்கும் சக்தி வாய்ந்த சமூக நாடகங்களை மேடையேற்றின. சிறுகதை, நாவல் துறைகளில் சிறந்து விளங்கிய ஆசிரியர்கள் நாடக ஆசிரியர்கள் ஆனுர்கள்.

இவை தொழில்ரீதியான நாடகங்களாக இருக்கும்போது அமச்சூர் (Amateur) குழுக்கள் பல தோன்றின. இவர்களுக்கெல்லாம் முன்னேடியாக ஆசானுகத் திகழ்ந்தவர் பம்மல் சம்பந்த முதலியார். ஸர் சி. பி. ராமஸ்வாமி, சத்யமூர்த்தி போன்ற பல அறிஞர்கள் இவர்கள் நாடகத்தில் நடித்திருக்கிறுர்கள். அந்த ஊக்கத்தினுல் பல அமச்சூர் குழுக்கள் தோன்றி நாடகக் கலையை வளப்படுத்தின. திருவல்லிக் கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப், திரு. ஒய். ஜி. பி. குழு போன்றவைகள் இன்றும் நிலைத்துப் பணிபுரிகின்றன.

திரு. கே. பாலச்சந்தரின் ''ராகினி ரிக்ரியேஷன்ஸ்'' புயலாகத் தோன்றி நாடக மேடையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. நல்ல கதையம்சமும் நடிப்புத் திறனும் கொண்ட இளைஞர்கள் அவர் குழுவில் பங்கேற்றனர்.

நகைச்சுவை நாடக வாழ்க்கையை ஆரம்பித்த ''சோ'' சமூக விமரிசகராக அவலங்களை நையாண்டி செய்யும் Satirist ஆக விளங்கினுர். அவர் நாடகங்கள் நாடக மேடையில் புதிய பாணியைக் கொண்டு வந்தது.

இதை நாடகத் துறையின் பொற்காலம் என்று சொல்லலாம்.

இந்தக் காலகட்டங்களில் கால் நூற்றுண்டு காலம் திரு. மனேகர் அவர்கள் நாடக மேடையின் கொடியை உயர்த்திப் பிடித்து வருகிறுர். பண்டைய நாடக அமைப்பினை ஆதாரமாகக் கொண்டு புதிய விஞ்ஞான உத்திகளை புகுத்திப் புராண, சரித்திர நாடகங்களை அவர் மக்களுக்கு அளிக்கிறுர்.

## முற்போக்குக் கருத்துகள் வேண்டும்

இனி வருங் காலங்களில் நாடகம் எப்படி இருக்க வேண்டும். வெறும் களியாட்டமாக மட்டும் இருக்கக்கூடாது என்பது என் கருத்து. யதார்த்தமான முறையில் சமூகப் பிரச்சினைகளை அலசி முற்போக்குக் கருத்துக்களைப் புகுத்தி

நாடக மேடை சமுதாய மாற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாக இருக்கவேண்டும்.

இரண்டு உலகப்போர், முப்பதாண்டு சுதந்திரம், இவற்றிற்குப் பின் 'எந்த வழி' போவது என்று தெரியாமல் திகைக்கும் நமக்கு நாடக மேடை வழிகாட்டும் சாதனமாக இருக்க வேண்டும். சமுதாயத்தின் புரட்சிகரமான மாற்றத்திற்கு புதிய உத்வேகத்தை புதிய வடிவத்தை நாட்டுக் கலைகள் கொடுக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

இன்னும் முதுகைச் சொரிந்துவிட்டு இதமளிக்கும் நாடகத்தை விட ரத்த நாளத்தை துடிக்க வைத்து செயல்படும் நாடகங்கள் வரவேண்டும். இந்த பத்தாண்டுகளில் நாடக மேடையில் வாய் விட்டுச் சிரித்து பொழுதுபோக்கிக் கொண்டிருந்தோம். நாடக மேடை இனியாவது நம்மை சிந்திக்க வைக்கட்டும்.

---


*WITH BEST COMPLIMENTS FROM :*

# POLYMER GENERAL INDUSTRIES

(Manufacturers of
MOULDED RUBBER PARTS FOR
AUTOMOBILE INDUSTRIES.)

*Factory :*
(S-3) 5, New Avadi Road,
VILLIVAKKAM,
**MADRAS-600 049.**
Phone : 616974

●

*Office :*
11, CRESCENT AVENUE,
KESAVAPERUMALPURAM,
**MADRAS-600 028.**
Phone : 416258